# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 18. இறுதிச்சடங்கு

**பிரத்தியேக தகவல்கள் / வழிகாட்டல்கள்**

*சாவீடு*

- தனிப்பட்ட /குடும்ப இறுதிச்சடங்குக் கொள்கையினை ஊக்குவித்தல்.
- சாவீட்டில் பங்குபெறும் அனைவரும் முகக்கவசம் அணிதலை உறுதிப்படுத்துவதுடன் ஆகக் குறைந்த நாட்களுக்குள் கிரியையகளை முடிப்பதற்கு ஊக்குவித்தல்.
- வாசலில் சவர்க்காரம் இட்டுக் கைகழுவும் வசதிகளை ஏற்படுத்துதல்.
- இரண்டு கதிரரைகளுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளி இருத்தல் வேண்டும்.
- கோவிட்-19ற்குரிய உடல் இடைவெளி பேணுதல் தொடர்பான வழிகாட்டல்களைக் கடைப்பிடிக்கவும்.
- மதுபானம் குடித்தல், புகைத்தல் மற்றும் வெற்றிலை மெல்லுதல் ஆகியவைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- சீட்டு மற்றும் சதுரங்கம் முதலான பலகை விளையாட்டுகள் தடை செய்யப்பட்டுள்ளன.
- பானங்களை வழங்குவது அவசியமானால் சூடான பானம் ஒன்றினை ஒரு தடவை பாவித்து எறிந்துவிடும் குவளையில் வழங்க வேண்டும் என்பதுடன் பொதுமக்கள் பாவித்த குவளையை வீசுவதற்காக குப்பைக் கூடைகள் வைக்கப்பட வேண்டும்.
- கூடியளவு காற்றோட்டத்தினை ஏற்படுத்துவதுடன் வளிப்பதனாக்கிகள் சரியாகத் தொழிற்படுவதனை உறுதிப்படுத்துக.
- பொதுவாகத் தொடுகைக்கு உள்ளாகும் மேற்பரப்புகளை (உதாரணமாக கதவுக் கை பிடிகள்) கிரமமான முறையில் தொற்று நீக்கம் செய்க. வளிப்பதனாக்கிகள் இல்லாதவிடத்து கதவுகளைத் திறந்து வைத்திருக்கலாம்.
- இயலுமான விரைவில் தகனம்/அடக்கம் செய்வது பரிந்துரைக்கப்படுகிறது.
- கோவிட் 19 இனால் ஏற்படும் சாவுகளுக்கான இறுதிக்கிரியை ஏற்பாடுகள் அதற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**பங்குபற்றுபவர்கள்**

- அவசியமெனில் மட்டுமே இறுதிச் சடங்கில் பங்கெடுங்கள். உங்களது அனுதாபங்களை தொலைபேசி/மின்னஞ்சல்/ பிற வழிகளில் பகிர்துகொள்ளுங்கள்.
- உங்களது இறுதி அஞ்சலியினை இயலுமான விரைவில் மேற்கொள்வதுடன் சாவீட்டில் செலவிடும் நேரத்தினை குறைத்துக் கொள்ளுங்கள்.
- எப்போதும் ஒரு முகக் கவசத்தினை அணிந்திருங்கள்.
- சாவீட்டில் மிகக் குறைவானவர்களுடன் தொடர்பில் இருப்பதுடன் உங்களது அனுதாபத்தினை உடல் தொடுகைகள் இல்லாமல் வெளிப்படுத்துங்கள். உதாரணமாக உங்கள் இரண்டு உள்ளங் கைகளையும் உங்களது மார்பிலே ஒன்றாக வைத்தல் (கட்டித்தழுவல்/முத்தமிடல் ஆகியவற்றைச் செய்ய வேண்டாம்).
- நபர்களுக்கு இடையில் எப்போதும் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணவும்.
- நீங்கள் நோயுற்றிருப்பதாக உணர்ந்தால் (காய்ச்சல், இருமல் மற்றும் தடிமன்) / தொற்றா நோய்களை கொண்டிருந்தால்/கர்ப்பவதியானால் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வேண்டாம்.
- சாவீட்டினுள் நுழையும் முன்னரும் வெளியேறும் போதும் உங்கள் கைகளைக் கழுவிக் கொள்ளுங்கள். வீடு திரும்பியதும் உடனடியாக முழுகுவதுடன் (தலைக்குக் குளிப்பதுடன்) சகல உடமைகளையும் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- சாவீட்டில் அறிவித்தல் ஒன்றினை காட்சிப்படுத்தலாம்.
- முகக் கவசம் ஒன்றினை அணியவும்.
- வந்தவுடன் கைகளைக் கழுவவும்.
- எப்போதும் ஒருவருக்கு ஒருவர் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணவும்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020